தமிழ்நாடு மின் துறை பொறியாளர் அமைப்பு
Tamilnadu Power Engineers Organisation
TNPEO
Regd. No : 2998/CNI
Under Indian Trade Union Act, 1926
Afiliated : COTEE - EEFI
27, Mosque Street, Chepauk, Chennai - 600 005. Ph : 28548529, 28515038 Fax : 28516574 Web : www.tnpeo.org e-mail : tnpeogs@gmail.com

R.Sridhar, Honorary President
T.Arivazhagan, President
K.Arulselvan, General Secretary
K.Jeevanandham, Treasurer

ORGANISING SECRETARY
S.Appadurai

DEPUTY GENERAL SECRETARIES
M.Parimelazhagan
R.Guruvel
A.Palani

VICE PRESIDENTS
D.Kumar
V.K.Thanikaiarasu
M.Ramasubbu
G.Sankareswaran
P.Aarumugam
V.Lakshminarayanan
A.R.Alagarsamy
T.Karunambigai
A.Muruganantham
J.Engels
R.Gokulavarman

SECRETARIES
R.Adalarasu
P.Kumaresapandian
M.Muniraj
A.E.Arunachalam
R.Somasundaram
M.Mayilvaganan
G.Gopalakrishnan
M.Irudhayaraj
M.Anandhan
M.Panimalar
T.Subramaniyan

நாள்: 10.11.2014

பெறுநர்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

ஐயா,

பொருள் : இளநிலைப் பொறியாளர் / உதவிப் பொறியாளர் பதவியில் 14 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளவர்களுக்கு (மின்னியல், இயந்திரவியல், கட்டிடவியல்) - அடுத்த பதவி உயர்வு கிடைக்காமல் ஓய்வு பெறும் நிலை உள்ளதால் - உதவி செயற்பொறியாளர் (NI) விரைந்து வழங்கிட கோருதல் தொடர்பாக.

பார்வை : உதவி செயற்பொறியாளர் (NI) வழங்கிட வேண்டி இறுதியாக அளிக்கப்பட்டுள்ள எங்களது சங்க கடித நாள்: 16.8.2014

பார்வையில் கண்ட கடிதத்தின் படி, சங்கத்தின் சார்பில் நீண்ட காலமாக தீர்த்திட கோரிவரும் பிரச்சனையான, மின்னியல், இயந்திரவியல், கட்டிடவியல் துறைகளில் கடந்த 14 ஆண்டுகளுக்கும் மேலாக அடுத்த பதவி உயர்வு என்பது கிடைக்கப் பெறாமல் பணிபுரிந்து வரும் இளநிலைப் பொறியாளர் / உதவி பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் (NI) வழங்கிட வேண்டும் என்று எங்களது சங்கம் கடந்த இரு ஆண்டுகளுக்கும் மேலாக, இயங்கங்கள் மூலமாகவும், நேரடியாகவும் முறையிட்டு வந்துள்ளோம். தாங்கள் இதை கனிவுடன் பரிசீலித்து, பாதிக்கப்பட்ட பொறியாளருக்கு, பாதிப்பை சரிசெய்திடும் வகையில், அவர்களின் வலியை அறிந்து, பாதிக்கப்பட்ட பொறியாளர்களின் கோரிக்கையை ஏற்று, 14 ஆண்டுகள் பணிபுரிந்துள்ள இளநிலை பொறியாளர் / உதவிப் பொறியாளருக்கு, உதவி செயற்பொறியாளர் (NI) வழங்கிட வாரிய தலைவர் அவர்கள் அனுமதி அளித்திருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைவதுடன், பாதிக்கப்பட்ட பொறியாளர்கள் சார்ப்பில், எங்களது சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த சூழலில் ஒரு சங்கம் வாரியத்தலைவர் அவர்களின் நல் முயற்சியை பின்னுக்குக்கு தள்ளும் வகையில் பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம் பெறக்கூடாது என்ற தீயநோக்குடன் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வில் உள்ள Ratio வை, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செயற்பொறியாளர் (NI) வழங்கும் போது, பின்பற்றிட வேண்டும் என்று, திட்டமிட்ட குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிய வருகிறது. இது ஓய்வு பெறும் நிலையில் உள்ள பாதிக்கப்பட்ட பொறியாளர்களின் எதிர்பார்ப்பையும், அவர்களுக்கு கிடைத்த வாய்ப்பையும் சீர்குலைக்கும் நடவடிக்கை என்பதுடன் இது பொறியாளர்களின் ஒற்றுமையின்மையின் மிக மோசமான வெளிப்பாடு என மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பதவி உயர்வில் பாதிப்பு என்பது, ஏற்கனவே பதவி உயர்வில் கடைபிடிக்கப்படும் Ratio, வரிசை அடிப்படையில் அனுமதிக்கப்பட்டுள்ள பதவிகளின் எண்ணிக்கை, காலியிடங்களின் எண்ணிக்கை ஆகிய காரணிகள் முக்கிய காரணமாக உள்ள நிலையில், பதவி உயர்வு கிடைக்காமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு இடைக்காலமாக நிவாரணம் வழங்கிடும் வகையில் மற்ற பதவிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதிப்பை சரி செய்தது போல, பாதிக்கப்பட்ட பொறியாளர்களின் கோரிக்கையை ஏற்று வாரிய தலைவர் அவர்கள் NI வழங்கிட அனுமதி அளித்துள்ளநிலையில் மீண்டும் NI யில் Ratio என ஒரு சங்கம் குறிப்பிடுவது கொள்கை அளவிலோ, தார்மீக அடிப்படையிலே எவ்விதத்திலும் ஏற்புடையதாக இல்லை. பாதிக்கப்பட்ட பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் (NI) வழங்குவதன் மூலம், எந்த பதவியில் பணிபுரியும் பொறியாளருக்கும், அவர்களின் பதவி உயர்விலோ அல்லது வேறு எந்த விதத்திலோ எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாது என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

எனவே வாரியத் தலைவர் அவர்கள் 14 ஆண்டுகள் பணிபுரிந்துள்ள இளநிலை பொறியாளர் / உதவி பொறியாளர்கள் (மின்னியல், இயந்திரவியல், கட்டிடவியல்) அனைவருக்கம் உதவி செயற்பொறியாளர் (NI) பதவி உயர்வு வழங்குவதற்கான வாரிய உத்தரவு வெளியிட உரிய நடவடிக்கை மேற்கொண்டிட கேட்டுக் கொள்கிறோம்.

தங்களின் நம்பிக்கையுள்ள

10/11/14

(கே. அருள்செல்வன்)
பொதுச் செயலாளர்